ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கொற்கை, ஆழிசூழ் உலகு புதினத்தில் நெய்தல் நில மாண்புகள்

பேரா. ஆ. அடைக்கலராஜ்,
தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி – 620 002

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ்ச்சமூகம் செல்நெறி வழியில் காலந்தோறும் ஒரு இனக்குழுவின் வரலாறு வீழ்த்தப்பட்டிருக்கிறதேயொழிய வரலாற்றுச் சமூகம் ஒன்று இருந்மைக்கான சான்றுகள் ஏதும் இருந்ததுக்கான சான்றுகள் குறிப்பிடவில்லை. இவை தமிழ்நில அசைவியக்கத்தின் மறுக்க முடியாத உண்மை. வீழ்த்தப்பட்ட தொல்குடிகள் தொடர்ந்து, தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கான நெடிய பயணப்படுதலை முன்னெடுத்திருக்கும் இக்காலத்தில் படைப்பாக்கமும் அவசியமாகிறது. எண்பதுகளுக்குப் பிறகு பின்தங்கிய மக்களின் அரசியல் எழுச்சியையும், கலை இலக்கிய ஆக்கங்களையும் இவ்வகைப்பாட்டில் வைத்து புரிந்து கொள்ள இயலுகிறது. மேலும் களத்திற்கு வந்து சேராத பல விளிம்புநிலைச் சமூகங்கள் எச்சங்களாய் நிற்கின்றன. இவ்வாறு தொல்குடிகளில் ஒன்றான நெய்தல் நில மக்களின் வரலாறானது, அரசியலற்று, கலை இலக்கிய வெளிகளில் பதிய தொடங்கியிருப்பதைச் சமகாலத்தில் ஒப்பிட்டுப் பார்ப்பது, பரதவரின் தன் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யும் வகையில் அமைகிறது.

## முன்னுரை:

மனித மானிட குலத்தின் தொல் சமூகப் பண்பாட்டில் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சிகளை அறிவுக்கும் உழைப்பிற்கும் சான்றாய்த் திகழ்பவர்கள் பரதவ மக்களே. இலக்கியங்கள் மனித வாழ்வைப் பதிவு செய்யும் களங்களாக உள்ளன. புனைகதை இலக்கிய வடிவங்களுள் ஒன்றான நாவல் இலக்கிய வடிவத்தில் பரதவ மக்களின் வாழ்க்கை முறைகள் ஆவணங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவற்றை ஆய்வு செய்வதன் வழியாகத் தமிழினத்தின் தொன்மைச் சமூக வளர்ச்சி மாற்றம் முதலியவற்றினை அறிய ஏதுவாக அமையும். இலக்கியங்களில் பதிவாகியுள்ள பரதவர்கள் குறித்த ஆய்வுகள் குறைவு. இவ் ஆய்வு கொற்கை மற்றும் ஆழிசூல் உலகு ஆகிய நாவல்கள் வழியாக பரதவ மக்களின் வாழ்வியலையும் அவர்களைச் சார்ந்தோர்கள் பற்றியும் புலப்படுத்துகின்ற வகையில் அமைகிறது.

கலைச்சொற்கள்:

பரதவர், கடல், கட்டுமரம், மீன், முதலாளித்துவம், ஆங்கிலேயர் அடக்குமுறை, சமயம், சடங்குமுறைகள், காலணியாதிக்கம்.

## ஆங்கிலேயர்களின் ஒடுக்குதலும் தாக்குதலும்

ஆங்கிலேய அரசு பாண்டியபதியின் முத்துச் சிலாபத்தைத் தாங்களே நடத்துவதாக அறிவித்தது. ஆனால் நடத்த முடியவில்லை. காரணம் சங்கு முத்துக்குளிப் படுகைகளின் வரைபடம் பாண்டியபதியின் அரண்மனையில் இருந்தது. பிறகு குணதாசியுஸ் மகுடம் ஏற்று முத்துச் சிலாபத்தை நடத்திய நிகழ்வு எடுத்தாளப் பெற்றுள்ளது. தவிர ஏழுகடல் துறையில் கிடைக்கும் முத்துச் சிப்பிகளை ஏழு பங்குகளாக வைத்து அதில் ஒரு பங்கு மட்டுமே பாண்டியப்பதிக்கு என்ற செய்தி ப. 215ல் பதிவு செய்யப்பட்டிருப்பதன் மூலம் ஆங்கிலேயர்களின் ஒடுக்குதலும் தாக்குதலும் எத்தகையது என்பதை நமக்கு உணர்த்துகிறார்.

*அதன் பின் பரதவ மக்கள் ஆங்கிலேயர்களுடன் கொண்ட பகையுணர்ச்சி பாண்டியபதியின் மீதும் வந்தது. பர்னாந்து சிங்கராயர், தல்மெய்தா, நாடார் கர்டோசா போன்றோர் வலம் வந்த கொற்கை பர்னாந்துகளின் ஆதிக்கத்தில் இருந்த செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இதன் இடைப்பட்ட கால மாற்றத்தால் பாண்டியபதி வடம் தொட்டுக் கொடுக்காமலே இழுக்கப்பட்ட நிகழ்வு, அரண்மனை வாயில் முன் தேர் வந்து நின்றவுடன் மாதாவின் திருவடிகளில் தமது மணிமுடியினைத் துறந்ததன் எதிர்காலத் தினைக் கருதியே செய்துள்ளார் என எண்ண முடிகிறது. பாண்டியபதியின் வாரிசான பிரான்சியஸ் புற உலகினை நன்கு அறிந்திருந்ததால் பொதுமக்கள் சுதந்திரத்தை விரும்புவதாகக் கூறி இப்பதவியினை ஏற்க மறுக்கிறார். இஃது ஒரு பதச் சோறு. அடுத்த நிகழ்வாக பெரிய எஞ்சின் வருவதும் அதனால் மணக்குடிப் பரதவர்கள் நான்கு படகுகளில் மிக நீளமான பலகையினைப் பொருத்தி அதன் மேல் எஞ்சினை வைத்து இலாவகமாகக் கரை கொணர்ந்து சேர்க்கின்றனர். கரையிலிருந்து உருளைகளின் உதவியுடன் (மில்) ஆலை வந்து சேர்ந்த இராட்சச இயந்திரத்தினைப் பார்த்து பரதவர்களின் தொழில் நுட்பத்தினைக் கண்டு கப்பலின் கேப்டன் வியந்து போவதைக் காணமுடிகிறது.*

*புதினத்தின் கதாநாயகன் தோணி. தோணிகளின் கட்டுமானப் பணிகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. காரணம் மிகப்பெரிய பட்டப்படிப்பினை மேற்கொண்டும் பல்வேறுபட்ட வரைபடங்களைக் கொண்டும் கட்டும் ஒரு மேம்பாலம் ஓராண்டு ஆகுமுன்பே இடிந்து விழக் காண்கிறோம். ஆனால் எந்தவொரு வரைபடமும் கல்வி அறிவுமின்றித் தன் பட்டறிவினைக் கொண்டே தோணிகள் செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட டன் எடை கொள்ளும் தோணி செய்தல் வேண்டும் என்றால் அதன் வேலைப்பாடுகளை தச்சர்கள் மேற்கொள்கின்றார்கள். புதினத்தில் கந்தய்யா ஆசாரி அவரது வாரிசுதாரர்களும் தோணி கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதைக் காணமுடிகிறது. ஏரா, பிச்சல், அனியம், வங்கு அடைப்பு பலகை என ஒவ்வொன்றும் ஒவ்வொரு மரவகைகளைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. கொற்கைத் துறைமுகத்தில் அதிவேகமாக ஓடும் தன்மை கொண்டது ரெஜினா இது சிங்கராயரின் தோணி.*

*இதனை "நம் கர்தையாவுக்கு அய்யானு நினைக்கிறம் வெந்தேக்கு பலவயளுக்கும் கட்டயளுக்கும் வெளக்கெண்ணை தடவித் தடவி சுட்டுச் சுட்டு வணிச்சி எடுத்திருக்காம்"1 என்று கிலுக்குத் தண்டலின் கூற்று தோணியின் கட்டுமானப் பணிகளைத் தெளிவாகச் சுட்டுகிறது.*

*தோணி வேலைப்பாடுகள் முடிந்து தண்ணியில் தள்ளும் வரை தோணித்தண்டல் அருகிலேயே இருந்து வேலைப்பாடுகளைக் கண்காணித்து வருவதைக் காண முடிகிறது. துறைமுகத்தின் வளர்ச்சியில் பல்டோனா, சிங்கராயர், பர்னாந்து, கர்டோசா, நாடார் எனப் பல்வேறு வகைப்பட்ட இனத்தாரும் சுங்கச் சாவடிகளின் முத்திரைகளுடன் பல்பண்டங்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து துறைமுகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டார்கள். இந்நிகழ்வினைக் காணும் பொழுது*

*" வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்*
*கங்கை வாரியும் காவிரிப் பயனும்"02*

*எனும் பட்டினப்பாலையின் வைரவரிகள் நம் கண் முன் நிற்கக் காணலாம்.*

*மலையாள நடை, கொழும்பு நடையெனச் சென்று வரும் ஒவ்வொரு தோணியும் பாய்கிழிந்தும் பருமல் ஒடிந்தும் அணியத்துப் பலகை முறிந்து என பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆட்பட்டு வருவதைக் காண முடிகிறது. சுதந்திரத்திற்குப் பின்பு இலங்கை இராணுவத்தால் தோணித் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்படுவதையும் ஜோ சுட்டிக்காட்டத் தவறவில்லை. கிலுக்குத் தண்டல் முதல் புதினத்தின் இறுதியில் கொழும்பு நடையில் மூழ்கிய தோணியின் தண்டல் நெப்போலி ஈறாகவுள்ள தண்டல்கள் பல்வேறு அவதிகளுக்கு உள்ளாவதைக் காண இயலும். திறமையான கடலோடிகளான தண்டல்கள் இயற்கைச் சீற்றத்தினை லாவகமாகக் கையாளுவதைக் காண முடிகிறது.*

*கடற்கரையில் வாழும் பரதவ மக்கள் பல்வேறு தொழில்முறைகளைக் கையாளுகின்றனர். தோணிப் பயணம் மீன்பிடித்தல் உப்பளம், முத்து சங்குகுளி எனக் கடல் சார்ந்த தொழில்களையும் கடல் சாராத தொழில்களையும் மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது. அந்த வகையில் சங்கு குளிக்கும் தொழிலாளர்களின் வாழ்வியல் பின்புலத்தினை நாம் அறியும் வண்ணம் ஜோ டி குருஸின் புதினம் அமைந்திருப்பதைக் காணலாம். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது உண்மையே. குழிகல்லை எடுத்துச் செல்லாமல் குடியோடிய சந்தகுரூஸ் வலம்புரிச் சங்கினை*

*எடுத்து உயிர் துறக்கின்றான். மேலும் சங்கு குளிப்பவர் தம் அரச்சாலில் குறிப்பிட்ட சங்குகளை மட்டுமே எடுத்து வருதல் முடியும். அவ்வாறின்றி அளவிற்கதிகமாகச் சேகரிக்கும் பொருட்டு குழியோடிய அதேயிடத்தில் இறக்க நேரிடுவதாக லாரன்ஸின் இறப்பின் வழி அறியும் கருத்து. பிறகு ஆங்கில அரசின் ஆட்சியில் காவலில் ஈடுபட்டிருந்த காவலர்கள் சங்குகுளி மக்களின் தெருக்களிலும் வீடுகளிலும் சங்கு தேடுதல் வேட்டை நடந்தேறுகிறது. இதன் விளைவு தொழிலாளர்களின் வாழ்க்கை நிம்மதியற்றுச் சீரழிவதைக் காணமுடிகிறது. பெண்கள், முதியோர், குழந்தைகள் என இரக்க மனமற்று வன்முறைத் தாக்குதல் நடத்துவதையும் காண முடிகிறது.*

*துறைமுகத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் மையமிட்ட செய்திகள் காணப்படுகின்றன. தொழிலாளர்களின் நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட வி.எ.நாதன் அல்வாரிஸ் பிரான்சியஸ் (பாண்டியபதி) போன்றோரின் முக்கியப் பங்கு சுட்டத்தக்கது. தவிர நடுத்தர மக்களின் தோணிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் காப்பீடு பெற்றுத் தந்து அரசின் நேரடி உதவிகளைப் பெறும் வகையில் உதவிவருவதைக் காண முடிகிறது.*

*தோணிகளில் தண்டலாகப் பயணிப்போர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சுயமாகத் தோணிகள் நடத்துவது இயல்பு. அந்த வகையில் பிலிப் தோணி வாங்குவதற்கு முன்பணம் கொடுத்த செய்தியினை திரேசா பவுல் தண்டலின் மகன் அறிகிறான். பவுல் தண்டலின் இல்லத்தில் அமர்ந்திருந்த பிலிப்பிடம் எங்கள் சொத்தில் களவாடிய பணத்தை உடனடியாகக் கட்டினால் நீ இங்கேயே தண்டலாகப் போகலாம் எனவும் என் குடும்பத் சொத்துகளைத் திருடியவன் என்றும் சாடுகிறான். சோபாவில் அமர்திருந்த பிலிப்பின் நிலை சொல்லொணாத் துயரநிலை எழுவதா? அமர்வதா? அதற்கு ஏதாவது சொல்லிவிடுவானோ எனும் மனத்தாங்கலில் தவிப்பது தெரிகிறது. பவுல் தண்டல் நெஞ்சு வலியால் துடித்துக் கொண்டிருக்கும் போதும் "எய்யா பிலிப் எனக்கும் நடந்து கொண்டிருப்பவைக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை"3 என்று கூறி வாயிலையே வெறிக்கப் பார்க்கும் சூழ்நிலை ஆறாத்துயரினை வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.*

*பிலிப் தண்டலின் சென்னை வருகை, நண்பர் சண்முகவேல் நாடார்க்கு மட்டற்ற மகிழ்ச்சியினை அளிக்கிறது. அவரது கனிவான உபசரிப்பால் மெய்சிலிர்த்துப் போகிறார் பிலிப் தண்டல். இவரைப் பார்க்கும் பொழுதெல்லாம் "தோணி பாலத்தில் கடலில் விழுந்தவனைக் காப்பாற்றவில்லை என்றால் நான் இந்த உயர்ந்த நிலைக்கு வந்திருக்க முடியுமா தண்டல்வாள்"4 என்று கூறும் சண்முகவேலிடம் எதார்த்தப் போக்கு காணப்படுவதை உணர முடிகிறது. பிலிப்பை இரயிலடி வந்து கண்ணீர் மல்க வழியனுப்பி வைக்கும் பாங்கு உற்ற நட்பிற்கு மட்டுமே அது கைவந்த கலை என்பதைச் சொல்லாமல் சொல்லும் பங்கு ஜோவிற்கு மட்டுமே உரியது. இந்நிகழ்வினை என்னும் பொழுது*

*" முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பினும்*
*நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"5*

*எனும் நற்றினைப் பாடல் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.*

*புதினத்தில் மதலேனின் பாத்திர வார்ப்பு ஒரு விதமான புரிதலையும் அர்த்தத்தினையும் வருங்கால வாரிசுகள் எதிர்காலத்தை நோக்கி எய்யப்பெற்ற அம்புகள் எனும் வாழ்வியல் தத்துவத்தை முன்வைக்கக் காணலாம்.*

*இந்நிலையில் "கேவலங்கெட்ட பொலப்புதாம். ஆனா ஒன்னையக் காப்பாத்திற்றம் மக்கா"6 எனக் கூறும் பாக்கியத்தின் வரிகள் மக்களிடையே விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துகிறது. இது தவிர புனிதாவும் சத்தியாவும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுகின்றனர். அப்பொழுது தன் தமையனே தன்னிடம் பாலியல் உறவு கொள்ள முயன்றதாகக் கூறுகின்றாள். "நான் அவனை அன்று காப்பாத்திற்றம் புனிதா"7 என்ற கூற்று வருங்கால சந்ததியினர்கள் பண்பாட்டிலிருந்து நிலை தவறாமல் இருத்தல் வேண்டும் என்ற நிலைப்பாட்டினையும் முன் வைக்கக் காணலாம்.*

*இவை தவிர புதினத்தின் ஒவ்வொரு நிலையிலும் தோணித் தொழிலாளர்கள் மட்டுமின்றி பல்தரப்பிலிருந்தும் அம்பா, தாலாட்டு, ஒப்பாரி, பாண்டியபதியின் வருகை, சடங்கு, போன்ற பாடல்கள் புதினத்திற்கு மெருகேற்றுகின்றன. இவை மட்டுமின்றி குமரியம்மன், சந்தன மாரியம்மன் போன்றதாய்ச் செய்து வழிபாட்டினை மேற்கொள்ள வலியுறுத்துவதையும் காண முடிகிறது.*

*எந்த ஒரு பிரிவினையும் பிரச்சினைகளில் தான் முடியும் என்பது தத்துவர்த்தத் தேற்றம். நாடு, மொழி, இனம் ஆகிய பிரிவினைகளும் என்றும் பிரச்சினைகளில்தான் முடிவடையும் என்பதுவும் இச்சித்தாந்தத்திற்கு உட்பட்டதே ஆகும்.*

*மத நல்லிணக்கத்தினைப் புரிந்துகொள்ளும் மதம் பிடிக்காத மாந்தர்களின் அறிவுமுறை ஆற்றல்கள் ஓங்கி எழும் காலமதில் சாத்தியமாகலாம் இந்தச் சத்தியங்கள். கடவுள் மனத்தினில் மட்டும் வாழுபவனே என்பது நடுநிலையாளரின் கருத்து. மதத்தில் வாழுபவன் என்பது மதம் பிடித்தோரின் கூற்று. அது அவர்களை வறுமைக்கோட்டிற்கு மேலும் மட்டுமல்ல. செல்வ செழிப்புக் கோட்டிற்குக் மேலே மென்மேலும் எடுத்துச் செல்லும் என்பது நாளும் கண்கூடாய்க் காணுகின்ற களியாட்டம்.*

*கொற்கை ரயில் பயணத்தில் ஆரம்பித்து ஒரு நூற்றாண்டிற்குப் பின் ஒரு ரயில் பயணத்தில் முடிவுறும் சம்பவங்களின் சந்ததிகளின் சாமானியர்களின், சல்லாபங்களின் தனவான்களின் தடுமாற்றம் கொள்பவரின் காமுகன்களின் பெருமை கச்சொடங்களின் பத்தினிகளின் படிதாண்டியவர்களின் பாலகரின் துறவறம் என்ற கச்சை கட்டிய பேராசை பிச்சைக்காரர்களின் கூட்டுக்கதை. இதில் மதம் மாறிய நாலு நூற்றாண்டுகளுக்குப் பின்னும் சந்தன மாரியம்மனைத் தரிசிக்கும் தகவல்கள் முதல் தோணி என்ற மரக்கலத்தின் தோற்றுவாய் தொழில்நுட்பத் தகவல்களும் - தாராளமாய் விரவிக் கிடக்கின்றன.*

*ஒற்றுமை, கூட்டு முயற்சி, பொதி மாடுகள் போன்ற ஓர் உழைப்பு என்பதில் முனைவுற்று முன்னேற்றம் கண்டு அருகில் வாழ்ந்து வரும் ஒரு சமூகம் ஒரு பக்கமும் மதத் தந்தைமார்களின் அன்றாடப் பிரசங்கங்கள் தொல்லைகளில் இன்னும் தங்களைத் தொலைத்துக்கொண்டு காலை மாலை வேளைகளில் ஆலயம் தொழுவது ஒன்றுதான் கடவுளைத் திருப்திப்படுத்தும் ஒரே செயல் எனும் ஆணித்தரமான நம்பிக்கைகள் நன்றாகவே வேர்விட்டு, தன் முன்னேற்றத்திற்குத் தடைவாங்கி வந்துள்ள ஒரு சமூகம் தொழிலில் முன்னேறி வரும் பிற சமூகத்தை ஏக்கத்துடன் பார்ப்பது எங்ஙனம் நியாயம் ஆகும்? இதுபோன்று கொற்கை மறைமுகமாய் உணர்த்தும் கருத்துகள் ஏராளம் விரவிக் கிடக்கின்றன.*

*நீதிவழுவா நெறிமுறை என்று பெருமை பேசும் கொடை வள்ளல்களின் குடை சாய்ந்த வரலாறு முத்துப்பரல் கோப்பெருந்தேவியின் கோமகன் நெடுஞ்செழிய பாண்டியனின் அவைதனில் ஆரம்பித்து பொற்கை பொருந்திய கொற்கைப் பாண்டியன் வரை தமிழ் இலக்கியங்களை உலுக்கி நிற்கும் உண்மை நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே பிற்கால கடலரசர்களும் சாதித் தலைவர்களும் தனக்குப் போகத்தான் தானம் என்கின்ற அறநெறி அறிந்திடாமல் தலைமுறைகளுக்கு வந்திருக்க வேண்டிய பெருந்தனங்களின் அறநிலையங்களுக்கும் நகர சபைகளுக்கும் அள்ளித் தந்துவிட்டு, மதத்தலைவர்களின் அவ்வுலகக் கற்பனைக் கிரீடங்களின் தலை சுழன்று இவ்வுலகப் பட்டங்களை மட்டும் வாங்கிவிட்டுப் பறக்க விட்டனர் தம் சந்ததிகளின் நல்வாழ்வே என்றே கூறலாம்.*

*இலங்காபுரி தேசத்துடன் காலம் காலமாய் தோணித் தொடர்புகளால் கருவாடு வத்தல் மல்லி நாட்டு மருந்து போன்ற வர்த்தகத்தில் ஈடுட்டிருந்த சமூகம் இன்று இந்திய கடல் எல்லைக்குள் தினம் தினம் தாக்கப்பட்டு அல்லது தகர்க்கப்படும் அலங்கோலங்களைக் காணும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதையும் உணர முடிகின்றது.*

*காரில் பயணம் செய்த காகுச் சாமியார் வருந்தி தலைச் சுமையுடன் நடந்து வந்த எந்த கோவில்பட்டிக்காரருக்குக் காரில் இடம் கொடுத்தாரோ அவரே பின் காலத்தில் கோடீஸ்வரராய் வளர்ந்த கதை ஆழி சூழ் உலகு கதையில் மட்டுமல்ல நடைமுறையிலும் நாளும் காணும் உண்மை.*

*மதங்களின் நிறைகள், குறைகள் ஆன்மீகவாதிகளின் உசுப்பலில் தாக்கப்படலாம் என்று தெரிந்திருந்தும் அவற்றின் தவறுகளின் செய்யத் தவறியவைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்லியிருப்பது ஆசிரியரின் தினவெடுத்த தோள்கள். கடல் அலைகளைத் தைரியமாய் எதிர்த்துப் போராடி வளர்ந்த தலைமுறையில் வந்ததின் காரணமாய் அமைகிறது. காலையில் ரயில் கொற்கை வந்த பின்னும் பிலிப் தண்டலிடம் அசைவில்லை என்ற வரிகளுடன் முடிவடைகின்றது ஒரு சகாப்தம்.*

*மாறுபட்ட காற்று மாறுபட்ட நீரோட்டம் ஒன்று வரைபடம் எழுதி விளக்கியிருக்கும் தன்மை பாமரரும் புரிந்து கொள்ள உதவும் வழி. அதுபோல் பாய்மரக் கப்பலின் படம் வரைந்து பாகங்கள் குறிப்பிட்டுள்ளது. அதன் ஓட்டத்தினூடே கடலில் பயணிக்கும் வாசகர்கட்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைகின்றது.*

*பண்டைக் காலத்தில் முத்து வணிகத்தில் கொழித்து விளங்கிய கொற்கை துறைமுக பிரதேசத்தில் 1914ல் ஆரம்பமாகும் நாவலின் கதையானது 2000 ஆண்டில் நிறைவு பெறுகிறது.*

இந்த கால இடைவெளியினுள் கொற்கையை சேர்ந்த பரதவர் சமூகத்தில் உருவாகிய மாற்றங்கள், நாடார் சமூகம் கொற்கையின் ஒரு அடையாளமாக மாறியதன் பின்னணியிலிருக்கும் அச்சமூகத்தின் அசுர வளர்ச்சி, கப்பல் வணிகத்தின் முன்னேற்றம், கொற்கையில் கொழித்த பிற தொழில்களின் விருத்தி, கதை நடக்கும் காலத்தில் இடம்பெறும் அரசியலின் முக்கிய நிகழ்வுகள், வெள்ளையர்கள் மற்றும் கத்தோலிக்க மதப் பிரதிநிதிகளின் உண்மை முகம் என கொற்கையின் உருமாற்றத்தை பிரமிக்கத்தக்க வகையில், எண்ணற்ற தகவல்களுடனும் பாத்திரங்களுடனும் நாவலாசிரியர் பதிவு செய்கிறார்.

பரதவ சமூகத்தில் நிலவிய ஒற்றுமை உருவாகிய பல்வேறு சங்கங்கள், அச்சங்கத்தினை முன்னெடுப்பதற்குப் பதிலாகத் தம் சுயநலத்தின் நலனை எவ்வாறு குழி தோண்டிப் புதைத்தன என்று நாவலில் கூறப்படுகிறது. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பிரதிநிதிகள், படிப்பறிவு இல்லாத பரதவர்களைச் சுரண்டினார்கள் என்பதனையும், குருக்கள், ஆயர்கள் எனும் போர்வைக்குள் ஒளிந்துகொண்டு மக்களுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக சொகுசான சுகவாழ்வு வாழ்ந்ததையும் எந்தத் தயக்கமுமின்றி நாவலில் விவரிக்கிறார் குருஸ்.

நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள் யாவரையும் மனதில் இருத்திக் கொள்ளல் என்பது சிரமமான ஒன்றாகும். லிடியா, ரஞ்சிதா, சலோமி, மதலேன், பாக்கியம் போன்ற பெண் பாத்திரங்கள் அதிர்வையும், மனநெகிழ்வையும் தருபவையாக உருவாகி நிற்கின்றன. பரதவர் சமூகத்தின் பெண்களின் கண்ணீர் வரலாறு அவர்களின் வளர்ச்சியுடன் கைகோர்த்துப் பயணிக்கிறது. ஆனால் கதையில் வாசகர்களின் மனதில் இலகுவாக வந்து ஏறி விடும் பாத்திரம் பிலிப் தண்டல் பாத்திரமாகும்.

கப்பலில் எடுபிடியாக வேலைக்குச் சேர்ந்து, பின் பெரும் முதலாளியாக உருவாகும் பிலிப் தண்டல் பாத்திரம் நாவலின் நடுப்பகுதியில் மெதுவாக மறைந்து போய்விடுகிறது. நாவலினைத் தொடர்ந்து இழுத்துச் செல்லும் பிற பாத்திரங்கள் வழியாக, பிலிப் தண்டல் மீது நாம் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் வகையில் தகவல்கள் வந்து விழுகின்றன. இருப்பினும் இப்பிரம்மாண்டமான நாவலை வாசகனின் மனதைக் கனக்க வைத்து நிறைவு செய்து வைப்பவர் பிலிப் தண்டல்தான்.

*மீனவ மக்களின் பதிவுகள்*

நாவல் என்பது மொழி காலத்தோடு உரையாடிக்கொள்வது. அதாவது இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்குமான உரையாடலே கதையாக வெளிப்படுகிறது. உலகிலேயே மிகச்சிறிய கதை என்பது ஒரு ஊர்ல என்று தொடங்கும் கதையே. இதன் தொடர்ச்சியில் கடலும் கதையாக சித்திரப்படும். மேலும் பிரபஞ்சத்தில் கடல் என்னும் இயற்கையின் அற்புதம் மகத்தானது. உலகை நிலை நிறுத்துவதிலும், மாற்றி அமைப்பதிலும் அதன் நிச்சலனங்கள் முக்கியமானவை. மனித இனத்தையே மூழ்கடிக்கும் வல்லமை வாய்ந்த கடலை அதன் மனிதன் ஆளுகைக்குட்படுத்துகிறான். அதற்குக் காவலாக இருக்கிறான். அதன் உயிரினங்களை இவன் நிர்வாகம் செய்கிறான். புவி எங்கும் பரந்து நிறைந்த அந்த மனிதர்கள் அற்புதமானவர்கள். அந்த மீனவ மக்களைப்பற்றிய பதிவுகள் உலக இலக்கியங்களில் மிகக்குறைவு தான். இந்திய இலக்கியங்களில் அவ்வப்போது சில பதிவுகள் இருந்திருக்கின்றன. தமிழில் நெய்தல் நிலத்தின் வகைப்பாட்டைச் சேர்ந்த மீனவ மக்களைப் பற்றிய பதிவுகள் குறைவு. ஐவகை நிலங்களைப் பதிவு செய்த சங்க இலக்கியங்கள் கூட இந்த மீனவ மக்களின் வாழ்க்கை சித்திரத்தை எவ்வகையிலும் பதிவு செய்யவில்லை. இந்நிலையில் தமிழின் நவீன இலக்கிய காலகட்டத்தில் தோப்பில் மீரானின் மீனவர்கள் குறித்த சிறிய குறிப்புகளுக்குப் பிறகு ஜோ டி குரூஸ் முதன் முதலாக அவர்களைப்பற்றிப் பதிவு செய்திருக்கிறார். ஆழி சூழ் உலகிற்கு அடுத்தபடியாக இந்த கொற்கை மிக முக்கியமான நாவல். எதார்த்தவாத வகைப்பாட்டைச் சார்ந்த வரலாற்று நாவல். இது கொற்கை என்ற பாண்டிய துறைமுகத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. கொற்கையை மையமாக வைத்து ஒரு மிகப்பெரிய பரதவர் குடும்பத்தின் கிளை இதுனுள் விரிந்தும், நெடிந்தும், காலத்தை நோக்கிப் பயணம் செய்கிறது. மீனவர்களான பரதவர்கள் தங்களின் வாழ்நிலையை இருத்திக் கொண்டதை இதனுள் பயணம் செய்வது மூலம் நாம் அறிய முடியும்.

ஜோ டி குரூஸின் இந்த நாவல் விரிக்கும் கதைவெளி அயனமானது. நெய்தல் நிலம் பற்றிய விரிந்த மனச்சித்திரத்தை வாசகனுக்கு அளிக்கிறது. கொற்கை என்ற துறைமுகத்திலிருந்து அன்றைய காலகட்டத்தில் இலங்கைக்கும், பிற நாடுகளுக்கும் தோணி வழியாக வாணிபம்

*நடைபெற்றதை கதைவெளியாக, அதன் நுட்பமான சித்திரமாக இது பிரதிபலிக்கிறது. தோணி என்பது அன்றைய கப்பல். அதன் மூலம் தான் 18, 19 மற்றும் 20 ஆகிய நூற்றாண்டுகளில் இலங்கைக்கு மனிதர்கள் சென்றார்கள். இன்னும் இந்திய வம்சாவெளித் தமிழர்களுக்கு அங்கு கள்ளத்தோணி என்று தான் பெயர். மரக்கலங்கள் மற்றும் தோணிகள் தமிழர் வாழ்வில் பெரும்பங்காற்றி இருக்கின்றன. ஒரு கட்டத்தில் பிரிக்க முடியாத ஒன்றாக இருந்திருக்கின்றன. கடல் என்ற போக்குவரத்து வழித்தடம் உருவாகிய காலத்திலேயே தோணிகளும் அதனுள் பயணம் செய்திருக்கின்றன. நெய்தல் நில மக்களின் வாழ்வாதாரமே மீனும் தோணியும்தான். வெறுமனே ஒன்றைக் கடந்து விட முடியாததை அந்நிலமக்கள் கடலால் சாதித்தார்கள். மீன்கள் பற்றிய மோசமான கருத்தோட்டம் அந்நிலமற்ற பிற மக்களின் பொதுப்புத்தியாக இருந்திருக்கிறது. மீன்கள் மற்றும் கடல் சார்ந்து தான் பல ஆங்கிலச்சொற்கள் தொடக்கம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக நேவ. ஆங்கில உலகில் இந்த நெய்தல் நிலம் சார்ந்து ஏராளமான சொற்கள் உண்டு.*

*கொற்கை என்னும் பாண்டிய துறைமுகம் முன்னர் வணிக வெளியாக இருந்ததைக் கதைப்படுத்துகிறது இந்நாவல். கடற்கொள்ளையர்கள் குறித்தக் கதை வரியும் இந்நாவலில் இடம் பெறுகிறது. கடல் என்ற நீர்ப்பரப்பின் வாழிடர்கள் கொள்ளையர்கள். கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் காலத்தில் இருந்தே இவர்களைப் பற்றியப் பலத் தொன்ம கதைகள் உண்டு. கொற்கை துறைமுக வணிக செயல்பாட்டில் இந்த கடற் கொள்ளையர்கள் குறுக்கிட்ட நிகழ்வு இந்நாவலில் இடம்பெறுகிறது.*

*துறைமுகம் பற்றிய கதைச் சித்திரம் ஒரு எதார்த்த வெளியாக அதற்கான மனிதர்களுடன் விரிந்து செல்கிறது. கடல் வாணிபம் தொடங்கிய காலத்திலேயே துறைமுகமும் தொடங்கி விட்டது. அன்றைய துறைமுகம் என்பது படகுகள் அணையுமிடம். அன்றைய துறைமுகம் இன்றைய மூடுண்ட அதிகாரத் துறைமுகமாக இல்லாமல் திறந்த வாணிப, தொழில் சமூகத்தின் துறைமுகமாக இருந்தது. அங்கு மனிதர்கள் உறவாடினார்கள். குறிப்பாக மீனவர்கள் அதனோடு வினை புரிந்தார்கள். வணிகர்களின் நண்பர்களாக இருந்தார்கள். அவர்களின் வாழ்வாதாரமே அந்தக் கடல் துறைமுகமாக இருந்தது. இந்நிலையில் பிரிட்டனின் காலனியாதிக்கக் கட்டத்தில் எல்லாத் துறைமுகங்களும் அதன் கட்டுப்பாட்டில் வந்தன. சாதாரணமாக மக்களின் வாழ்வியக்கமாக இருந்த துறைமுகங்கள் காலனியாதிக்கக் கட்டுப்பாட்டில் வந்ததன் காரணமாக எல்லாமே பறிபோனது. அவர்கள் பிரிட்டனின் அனுமதியோடுதான் அதனுள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். இதை இந்நாவல் விரிவாகக் கதைப்படுத்துகிறது. துறைமுகத்தில் அதிகார வர்க்கம் ஊடுருவிய நிகழ்வைப் பல கதையாடல்களாக ஒழுங்குபடுத்துகிறது. அதில் ஒரு வகை உரையாடல் இவ்வாறு அமைகிறது. தல்மெய்தா கதாபாத்திரமாக வெளிப்படுகிறது.*

*“ஆங்கிலேயரின் மனோரா கிளப்புக்கு பெரியவர் பிரான்சிஸ் தல்மெய்தா அவசரமாக அழைக்கப்பட்டார். அழைப்பின் விவரம் புரியாததால் என்னவோ ஏதோ என்று முணுமுணுத்தவாறு வந்தாலும் தல்மெய்தா தன் முகபாவத்தில் அதை வெளிப்படுத்தி விடாதபடிக்குப் பிரம்மப்பிரயத்தனப்பட்டபடியே வந்தார். வண்டியோட்டியிடமும், இங்கிலீஸ் கிளப்புக்குப் போ என்றதோடு சரி, துணைக்கு வருகிறோமென்று புறப்பட்ட இளைய மகன் லெம்பர்ட் தல்மெய்தாவை வலைக்குடி மெய்யல் பிள்ளையும் வேண்டாமெனத் தடுத்து விட்டார். கொற்கையில் மனோரமா கிளப்புக்குள் நுழையும் தகுதி ரிபேராக்களுக்கும், கர்டோசாக்களுக்கும் மோத்தாக்களுக்கும் மட்டும் தான் உண்டு. எதற்காக அழைத்தார்கள் என்பதை ஊகிக்க முடியாதவராய் சமீபத்திய நிகழ்வுகளை மனதில் அசைபோட்டவாறே குதிரை வண்டியிலேறி அமர்ந்திருந்தார்”8 என்று பதிவு செய்துள்ளது.*

*நாவலில் இவ்வாறு கதை நிகழ்வு கொற்கையின் கட்டுப்பாடு அதன் மீதான அதிகாரம் ஆகியவற்றை தல் மெய்தா வடிவில் பிரதிபலிக்கிறது. பறிபோன வாழிடங்கள் அவர்களின் அதிகாரம் ஆகியவை குறித்த அந்நியமான தவிப்புகளும், வலிகளும் வாழ்நாள் முழுக்க நிரம்பி இருந்தன.*

*மண்டையை பிளக்கும் உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது வெள்ளைக்கார அதிகாரிமாரும் சப் கலெக்டரும் காலினும் காளவாசல் கடற்கரையில் அமர்ந்திருந்தார்கள். எல்லா வள்ளங்களும் கரை பிடித்திருந்த நிலையில் முத்துச்சிலாபம் ஆரம்பிப்பதற்கான நேரம். தேரியில் அரைக்கு மேலே வெற்று உடம்போடு நான்கு பேர் பல்லக்கைத்தூக்கி வர கட்டியம் கூறும் கட்டியங்காரன் முன்னே ஓடிவந்தான். பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் காளவாசல் மரவீட்டை நெருங்கிப்*

பல்லக்கை கீழிறக்கிப் பவ்வியமாய் பணிந்து நின்றனர். அதற்குள் கொற்கை மேசைகாரத் தன்வந்தர்கள் கூட்டமும் கூடிவிட கட்டியங்காரன் குரலெடுத்தான்.

"அயோத்திப் பரவன் அலைகடலுக்கரசன்

.....................................................

சிற்பமாய் மண்படகு செய்து ஓட்டினோம்

.....................................................

சுக பௌத்திரரான பாண்டியபதி வருகிறார்

பராக் பராக் பராக்"9

பல்லக்கின் திரை விலக்கி வெளியே வந்தார் பரதவர் கோன் பாண்டியபதி குணதாசியுஸ். கைதூக்கி விட்டனர் அருகிலிருந்த உதவியாளர்கள். அங்கே எழுந்து நின்ற வெள்ளைக்கார அதிகாரி களையும், கலெக்டரையும் பார்த்துப் புன்னகைத்தவாறே தனக்குரிய ஆசனத்தில் போய் அமர்ந்தார்.

இதன் மூலம் அன்றைய கட்டத்தில் கொற்கையின் அதிகாரக் கட்டமைப்பு எவ்வாறு இருந்தது என்பதும், அந்த மக்கள் எப்படி யான அடிமைகளாக இருந்தார்கள் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது. அன்றைய காலத்தில் பல்லக்கு என்பது அரசர்களின் வாகனம். அதில் அரசர்கள் வைக்கப்பட்டு அதன் திரைகள் மூடப்பட்டு இராஜபாட்டையில் வலம் வர வைக்கப்பட்டார்கள். கொற்கையின் இயக்கத்தில் இதுவும் வெளிப்படுகிறது.

கொற்கையின் மையம்

குறுந்தொகையில், ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன் இயற்றிய நெய்தல் பாடலில்,

"நுண் வலைப் பரதவர் மட மகள்

கண் வலிப் படூஉம் கானலானே"10

பரதவர் என்னும் சொல் இங்கே காணக் கிடைக்கிறது, நுண்மையாக வலை நெய்யும் பரதவர் என்னும் பொருளில். பரதவரின் மட மகள் என்றும் குறுந்தொகையில் சொல்லப்படுகிறது. கொற்கையில் பரதவர்கள் செய்துவந்த அனைத்துப் பணிகளும் சொல்லப்பட்டுள்ளன. தோணி கட்டுதல், பாய்மரம் கட்டுதல், முத்து, சிப்பி எடுத்தல், மீன் பிடித்தல், பருத்தி வியாபாரம், உப்பளம், விவசாயம், நூற்பாலைகள், கடல் வணிகம் என பரதவ பெண்கள் குறித்தும் விரிவான அடையாளங்கள் காணக்கிடைக்கின்றன. கொற்கையில் அப்படி ஒன்றும் பரதவர் மகள்கள் மட மகள்களாக இருப்பது போலத் தெரியவில்லை. சின்னச் சின்ன கதாபாத்திரங்களானாலும் தனித்தன்மை மிக்கவராகவே ஒவ்வொரு பெண்ணும் காட்டப்படுகிறாள். ஆனாலும் ஆளுமை நிறைந்தவளாக வலுவான கதாபாத்திரமாக எங்கும் சொல்லப்படவில்லை.

அலையற்று அமைதியாய்க் கரைகளில் விளிம்பு மடக்கியபடி இருந்தது மன்னார்குடாக் கடல் போன்ற கவித்துவமான விஷயங்கள், கவித்துவமாகவும், ரசனையோடும் சொல்லப்பட்டுள்ளன. இவற்றை நாவலாசிரியர்,

'அலையடியோட இருக்க கடல்வ ஆண் கடல். அமைதியாக இருக்க கடல்வ பொட்டக் கடலும்பாவ'11 கொற்கையில் கடல் அமைதியாக இருக்கும். சிவன் கோயில் கொண்டுள்ள தலங்களில் கொற்கையும் ஒன்று என்னும் வாய் வழியாகச் சொல்லப்பட்ட கதைக் குறிப்பு ஒன்றும் உண்டு. கொற்கையில் சோலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு லிங்கத்திற்கு பூஜை செய்து இப்போது கொற்கை சிவதலமாகப் போயிற்று என்றும் சொல்லப்படுகிறது.

கொற்கை அன்னையின் தங்கத்தேர் பவனி குறித்து சொல்கையில், தேர் வர ஆரம்பித்த காலத்திலேயே வடத்தைபபாண்டியாதிபதி தொட்டுக் கொடுப்பதுதான் வழக்கமாய் இருந்திருக்கிறது. இவை அற்புதமாக சொல்லப்படும் வேளையில், சந்தன மாரியம்மனின் சித்திரம் ஆங்காங்கே மகிமை பொங்க வெளிப்படுகிறது. தோணியை எடுக்கும் போதும், கடலுக்குப் போகும்போதும் சந்தன மாரியம்மனை வழிபட்டுப் போவது வழக்கமான விஷயமாக இருந்திருக்கிறது.

"சித்திரை இறுதியில் வரும் சந்தன மாரியம்மன் கொடை விழாவை மெய்யல்பிள்ளை வம்சாவளிகள் எடுக்கிறார்கள். கிருஸ்துவர்களாக இருக்கிறோமே என்ற பாகுபாடே இல்லை. மெய்யலின் பூட்டனுக்கும் பூட்டன் காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் பழக்கமாம். சந்தனமாரி பரத்தி அவள் நம்முடைய ஆத்தா என்றும் சொல்வார் மொடுதகம்."12 "சந்தன சித்தர் அசரீரி அறிவிப்பில் புளியமரத்தடியில் தோண்டியபோது கிடைத்த மாரியம்மன் சிலையில், தோண்டி

*யெடுத்தபோதே சந்தன காப்பு சாத்தி இருந்ததால் அதே இடத்தில் சந்தனமாரிக்கு பூஜை செய்திருக்கிறார் சந்தன சித்தர். கொற்கையில் கோட்டையுள்ள ஒரே கோயில் சந்தன மாரியம்மன் கோயில்தான்.''13 சந்தனமாரியம்மன் கோயிலின் தல விருட்சத்தருகே நின்றிருந்தாள் சலோமி இந்த இடத்தில் ஸ்தல விருட்சம் என்ன மரம் என்று குறிப்பிடப்படவில்லை.*

*ஆதிமனிதனின், கற்கால மனிதனின் குணநலன்களோடும், இன்றைய காலகட்ட மனிதர்களின் குண விகாரங்களோடும் கொற்கை மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்றனர். சங்கங்கள் அமைத்து போராடுவதும், வழக்கு நீதிமன்றம் என அவர்கள் அலையும் காட்சிகளும் சமூகத்தின் மீதான வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் கலந்து வெளிப்படும் தருணங்கள் அவை. அந்தோணியாரின் கணவனை இழந்த மகளான சலோமியைத் திருமணம் செய்து கொள்கிறான் பிலிப். தன்னை விட வயது அதிகமானவள், மறுமணம் என்னும் அவளின் மனத்தடையையும் அவஸ்தையையும் சரி செய்கிறான்.*

*நாவலில், ''சிறுவனான பிலிப், தன்னுடைய தாயை வெறுக்கும், புதிதாக மகனைப் பெற்ற ரஞ்சிதம் சித்தியிடம் இருந்து பாசம் கிடைப்ப தற்கான காரணம் தன்னுடைய இளமை என்று உணர்ந்து, அங்கிருந்து சென்ற கணத்திலிருந்து சித்தியின் மகன் வாலிபனாக வளர்ந்து பின்பும் அந்த வன்மம் தொடர்வதும் படிப்படியாகக் காட்டப்படுகிறது. குடும்பச் சூழல் காரணமாகத் தோணிகளில் சிறு பிராயத்திலேயே ஏறும் பொடியன்களைத் தண்டல்மார்கள் தங்கள் காம இச்சைக்கு பயன்படுத்துவது காலம் காலமாக நடப்பதுதான். பரதவர் திருமண வழக்கம் குறித்து வரும் பகுதியைக் குறிப்பிடும்போது, அந்தக் காலத்திலிருந்தே பரதவர்கள் கலியாணத்தின் போது குடைபாவாடை பிடித்து, கட்டியம் கூறி நடை விரித்து ராஜமரியாதையோடு ஊர்வலம் வருவது வழக்கம். அன்றைய தினம் அந்த மாப்பிள்ளை ஊரின் ராஜாவாக மதிக்கப்படுகிறார். பகைவர்களும் எழுந்து நின்று மரியாதை செய்தாக வேண்டும்''14 என்று பதிவு செய்துள்ளது.*

*சங்கைப் பற்றிக் கூறும்போது,*

*''எல சங்கு சத தின்னுருக்கியா? அவிச்சி தின்னா ரெம்ப ருசியா இருக்கும். அர அவியலா அவிச்சி, சீவு உளி வச்சி சீவி காயப்போட்டு, பொரிச்சு சாப்பிட்டா நம்ம அப்பளங்க இருக்குல்ல அந்த மாதிரி இருக்கும்''16 நாவலாசிரியர், சங்கு பற்றிய விபரம் சொல்லப்பட்டு வந்து, கிருஷ;ண பகவான் கையில் இருக்கும் சங்கு பற்றி சொல்லி, வலம்புரிச் சங்கு தேடும் மனிதர்களைப் பற்றியும், கடலில் மூழ்கி சங்கு சிப்பி எடுப்பவன், இன்னொன்று எடுத்துவிடலாம் என்று சொடக்கு போடும் நேரத்தில் மூச்சை மறந்து உயிரை விடும் அவலம் பேச்சு வாக்கில் சொல்லப்பட்ட விதம் போல் பல இடங்களில் பேச்சு வழக்கிலும் பல கருத்துக்கள் வெளிப்படுகின்றன.*

*மதலேன் கல்யாணப் புடவையை கரண்டைக்கு மேல் தூக்கி நடக்க முடியாமல் நடந்து வருவதைப் பார்த்த கிளமென்ட், மதலேனிடம் அந்தக்கால சாச்சாமாரோடு நடந்த சண்டையைப் பற்றிச் சொல்கிறான். ''ஒருமுறை சாச்சாமாருக்கும் பரதவர்களுக்கும் சண்டை வந்தபோது சாச்சாமாருடைய ஆயுத பலத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஓட்டமெடுத்திருக்கிறார்கள் பரதவர்கள். அவ்வாறு ஓடி வரும்போது தாமிரபரணி ஆறு குறுக்கிட, ஆண்களெல்லாம் ஆற்றைக் கடந்து மறுகரைக்கு வந்திருக்கிறார்கள், வந்தவர்கள் திரும்பிப் பார்த்து கரண்டைக்கு மேலே சேலையைத் தூக்கிய பெண்களை வரவேண்டாமென்று சொல்லிவிட்டார்களாம். அந்தப் பெண்களை சாச்சாமார் திருமணம் செய்துகொண்டதாகவும் அதன் காரணமாகவே இன்று வரை அந்த சித்தி சின்னய்யா உறவு முறை வருவதாகவும் சொல்கிறார்கள்''17 மறுமணங்களும் பாலியல் உறவுகளும் ஆங்காங்கே அள்ளித் தெளிக்கப்பட்டுள்ளன. பிலிப் தண்டல் கணவனை இழந்த, தன்னிலும் வயது அதிகமான சலோமியைத் திருமணம் செய்து கொள்கிறான். ''என்னட மொத கல்யாணம் சரியா வரல||18 என்று, சண்முகவேல் தாத்தாவிடம் கூறிய பேரன் ரமேஷ; மதலேனின் மகள் சில்வியாவைத் திருமணம் செய்து கொள்கிறான்.*

*சில இடங்களில் பெண்கள் உயர் குண நலன்களுடன் உயர்வாகத் தோன்றும்படியான சில காட்சிகளும் உள்ளன. மதலேன் வரும் காட்சிகள் அத்தன்மையவை. பிலிப்பின் மருமகள் எழிலரசி, ரேவதி போன்றோரின் பாத்திரப் படைப்புகளும் அத்தகையதே. சில பகுதிகளில் பெண்களுக்காக பெண்களே வருத்தப்படும் காட்சிகளும் உண்டு.*

*நாவலில் ''ஒரே ஒரு பொம்பள புள்ள. ராசா மாதிரி மூணு ஆம்புள புள்ளயிருந்து அவளுக்கு ஒரு நல்ல மாப்புள அமையல்லிய. அவசரத்துல அள்ளித் தெளிச்ச கோலம்மாரி*

*ஆயிப்போச்சே"19பெண் தெளிவாக முடிவெடுக்கும் சிந்தையில் கவனமாக இருந்தாள் என்பதையும் ஒரு நிகழ்ச்சி மூலம் அறியலாம். அந்தப் பெண் தனக்கு கணவனாக ஒரு நடிகனை வீட்டில் பார்க்கிறார்கள் என அறிந்ததும் அவன் சினிமாவில். நகைச்சுவை என்னும் பெயரில் கோமாளித்தனமாக நடிப்பதாக அவனுடன் வெளியே சென்றால் தானும் கேலி செய்யப்படுவோமென்று அவனை சுய நினைவுடன் மறுதலிக்கிறாள்.*

*அறிவுரைகள் கூறும்போது, 'நமக்கு குறிக்கோள் என்னப்பா, நாலு துட்டு சம்பாதிக்கணும், நம்ம சந்ததியளுக்கு ஒரு நல்ல யாவாரத்த சொத்து பத்துவளோட வுட்டுட்டு போவனும். வந்த எடத்துல சண்ட புடிச்சிகிற்று அலையக் கூடாது. பர்னாந்துமாரு நமக்கு எதிராளியில்ல. நம்ம யாவாரம் வளரணுமுன்னா அவுக தொண அவசியம். வெள்ளைக்காரனே ஒத்துப் போறாம்'20 இந்த அறிவுரை வாசகங்கள் இன்றும் இருபத்திரண்டாம் நூற்றாண்டிலும், இனியும் உயிர்ப்போடுதான் நிலவும்.*

*முடிவுரை:*

*நெய்தல் நில அரசியலாக்கம் கலை இலக்கியப் பிரதி ஆக்கங்கள், கொற்கையின் குறுக்குவெட்டுத் தோற்றம், நாடார் சமூகத்தின் குறியீடு குறித்தும், பரதவர்களின் பல பிரிவு மக்கிள்ன சிந்தனையையும், வாழ்வையும் சிங்கராயர்கள், தல்மெய்தாக்கள், ரெபோராக்கள், நாடார்கள், பிள்ளைகள், பிராமணர்கள், தலித்துகள் மக்கள் பிரிவுகளை உறவுகளாலும் உறவின் சிதைவுகளாலும் இணைப்பதை உணர முடிகிறது. பெண்ணைப் புதிராக்கி நோக்கும் சமூக அமைப்பில் எல்லாம் பெண்கள் அடிமைகளாகத்தான் இருக்கின்றனர். ஆண் பெண் மனக்கயிறு கொண்டு வாழும் சமூகத்தை முதன் முறையாக, அதிலும் மொழியின் வடிவில் நாவலாசிரியர் பதிவு செய்துள்ளதையும் பெண்கள் முதன் முறையாக உடலும் இரத்தமும் சளியும் உணர்ச்சிகளும் கொந்தளிப்புமான உருவங்களாகின்றனர். தம் நெஞ்சத்தில் காலாகாலமாக வெளிப்படுத்த முடியாமல் மண்டிக்கிடந்த காதலை, காமத்தை, உடலில் எழும் அமைப்பிற்கான பேருவகையை நிர்வாணமாகச் செயல்படுத்துகின்றனர். பரதவப் பெண்களைச் சூழ்ந்துள்ள வாழ்வும் காலமும் ஆண்களும், அப்பெண்களை இயல்பூக்கம் மிக்க பெண்களாக ஆக்குகின்றனர் என்பதையும் தெளிவாக அறிய முடிகிறது. மேலும் ஒர் இனத்தில் கதையை மட்டுமல்ல மட்டும் ஓர் இனத்தோடு ஒட்டி உறவாடும் அல்லது வெட்டி முரண்படும் சம்பவங்களையும் சம்பந்தப்பட்டவர்களின் மனம் கோணாமலும் அதே சமயம் யதார்த்தத்தை தைரியமாகவும், சொல்லும் நேர்த்தி நூலின் மேல் நடக்கும் சாதனையாக உணரமுடிகிறது. இவ்வாறு நெய்தல் நிலத்தின் சிறப்பியல்புகளைத் தமிழ் உலகிற்கு எடுத்து;காட்டியதோடு மட்டுமன்றி நெய்தல் நிலத்தால் தமிழரும் தமிழும் செழத்து வளர்ந்தோங்கியுள்ளதைக் கட்டுரையாளர் மிக நுட்பமான ஆராய்ச்சியின் வழி புலப்படுத்துகிறார்.*

*சான்றெண் விளக்கம்*


1. ஜோ டி குருஸ், கொற்கை, ப.95.
2. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), இரண்டாம் தொகுதி, ப.94.
3. மேலது, முதல் தொகுதி, ப.72.
4. மேலது, நற்றிணை, ப.47.
5. ஜோ டி குரூஸ், கொற்கை, ப.985.
6. மேலது, ப.966.
7. மேலது, ப.1024.
8. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), முதல் தொகுதி, ப.63.
9. ஜோ டி குரூஸ், கொற்கை, ப.334.
10. மேலது, ப.433.
11. மேலது, ப.118.
12. மேலது, ப.579.
13. மேலது, ப.261.
14. மேலது, ப.447.
15. மேலது, ப.836.

*16.* மேலது, ப.542.

*17.* மேலது, ப.994.

*18.* மேலது, ப.630.

*19.* மேலது, ப.167

*20.* மேலது ப. 335


துணைநூற்பட்டியல்

1. ஜோ டி குருஸ், ஆழி சூல் உலகு, தமிழினி பதிப்பகம், சென்னை – 600 002, ஆறாம் பதிப்பு : 2007

2. ஜோ டி குருஸ், கொற்கை, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோயில் - 629 001, புதினொன்றாம் பதிப்பு: 2019

3. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம், (பாட்டும,; தொகையும்) முதல் தொகுதி, பாரி நிலையம், சென்னை, இறுதிப்பதிப்பு 2020.

4. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம், (பாட்டும,; தொகையும்) இரண்டாம் தொகுதி, பாரி நிலையம், சென்னை, இறுதிப்பதிப்பு 2020.

5. க. ப அறவாணன், தமிழ் மக்கள் வரலாறு, தமிழ்க்கோட்டம், சென்னை 600108, முதல் பதிப்பு 2005.

6. ஆ. இராகவன், கோநகர் கொற்கை, தமிழ் மண் பதிப்பகம், சென்னை.

7. கா. இந்திரபாலா, இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு பெற்ற வரலாறு, குமரன் புத்தக நிலையம், கொழும்பு, முதல் பதிப்பு 2006.

8. ஜோ டி குருஸ், வேர் பிடித்த விளைநிலங்கள், ஜீவா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு 2006.

9. ராஜம் கிருஷ;ணன், அலைவாய்க் கரையில், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, ஐந்தாம் பதிப்பு 2017.

10. எஸ். வையாபுரிப்பிள்ளை, சங்க இலக்கியம்(பாட்டும் தொகையும்), முதல் தொகுதி, பாரி நிலையம், சென்னை.


********* ********* ********** ********* ********* ********** ********** **********